# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, வில்சன் மேரி- திருச்சி, ஜெரின் மேரி -திண்டுக்கல், டோனெட்டல்லா அனஸ்தாசியாள், அனன்சியா மேரி, லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம், விமல் மேரி, ஜான்சி மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், வித்யா மேரி, ரூபெல்லா மேரி - தூத்துக்குடி, புஷ்பாமேரி- சிவகங்கை, சலேத் மேரி-திருப்பூர், பிரேமா - நெல்லை, சகாயம் - கடலூர், ஜெயசேகரி - கொடைக்கானல், **சகோ.** ஸ்டீபன் ராஜ் - தர்மபுரி.

### பொதுநிலையினர்

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், அனிருத் ஜோஸ்வா, லீமா தெரஸ், கிளாரா லூர்து மேரி, இமாக்குலேட் சோபியா, நான்சி பிழூலா, செலின் மேரி - திருச்சி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர், சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி, இருதய விஜிலா, ஜோஸ்பின் மேரி - திண்டுக்கல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், ரோஸ் அக்ஷயா - நெல்லை, மரிய பிரகாசம் - தர்மபுரி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரர். ஸ்டீபன் ராஜ் - தர்மபுரி**
**திருமதி. அற்புத சீலி - திண்டுக்கல்**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# ஈகை


## பதிப்பாசிரியர் பக்கம்

அ.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச


ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே இந்த நவம்பர் மாதத்தில் நாம் அன்னை மரியாள் கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட விழாவினைக் கொண்டாடுகின்றோம்.

குணங்களில் எல்லாம் மிகச்சிறந்த குணமாக கருதப்படுவது ஈகைக் குணம்தான். மகிழ்ச்சி என்பது பெறுவதில் அல்ல கொடுப்பதில்தான் அதிகமாக இருக்கின்றது. தமிழ் கலாச்சாரத்திலும் சரி உலக வரலாற்றிலும் சரி யாரெல்லாம் வாரிக் கொடுக்கின்றார்களோ அவர்களை வள்ளல் என்று இந்த உலகமே தூக்கி வைத்துக் கொண்டாடும். இன்றும் கொடுக்கும் கரங்களுக்கு எத்தனையோ நபர்கள் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். கொடுக்கின்ற பொருளின் அளவைவிட கொடுக்கின்ற மனதின் அளவு பெரிதாக இருந்தாலே போதுமானது.

அன்னை மரியாளின் பெற்றோர்களான ஜோக்கிம் மற்றும் அன்னம்மாள் இருவரும் மிகச்சிறந்த ஒருப் பரிசை கடவுளுக்கு கொடுக்கின்றார்கள். அந்த மிகச் சிறந்த பரிசுதான் அன்னை மரியாள். ஏன் அன்னை மரியாள் மிகச்சிறந்த பரிசு என்றால், எத்தனையோ வருட காத்திருப்புக்குபின் பல வருட ஜெபத்திற்குபின் பிறந்த அதிசயக் குழந்தை, அதுவும் உலகில் பிறக்கும் ஒவ்வொருக் குழந்தையும் ஜென்மப்



## உள்ளே



| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| அர்ப்பணிக்கப்பட்டோரின் அரசியான மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| அன்பரிடம் நமை சேர்ப்பார் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

பாவம் என்னும் கறையோடு பிறக்கும்போது எந்தவொரு பாவக்கறையும் இல்லாமல் பிறந்தவர்தான் அன்னை மரியா. இவ்வளவு மதிப்புமிக்க இந்தப் பரிசை கடவுள் தனக்கு ஏற்றக் காணிக்கையாக ஏற்றுக் கொண்டாரா என்றால் ஏற்றுக்கொண்டார்.

ஏற்றுக் கொண்டதன் விளைவுதான் அன்னை மரியாளுக்கு கடவுளின் மீட்புத் திட்டத்தில் பங்குப் பெறக்கூடிய மாபெரும் வாய்ப்புக் கிடைக்கின்றது. எந்தக் கடவுளால் படைக்கப்பட்டாரோ, எந்தக் கடவுளால் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டாரோ அதேக் கடவுளுக்கு தாயாகக் கூடிய மாபெரும் பாக்கியம் அவருக்கு கிடைக்கின்றது. குழந்தைப் பெற்றெடுக்கும் ஒவ்வொரு தாய்மார்களும் கன்னித் தன்மையை இழக்கும்போது ஆண்டவர் இயேசுவைப் பெற்றெடுப்பதற்கு முன்னும் கன்னி, இயேசுவைப் பெற்றெடுக்கும்போதும் கன்னி, இயேசுவைப் பெற்றெடுத்தப் பின்னும் கன்னி என்ற மாபெரும் பாக்கியமும் கிடைக்கிறது.

ஆண்டவர் இயேசு குடிகொண்டிருந்த அன்னை மரியாளின் உடல் இந்த மண்ணிலே அழிவதை கடவுளால் ஏற்றுக் கொள்ள முடியுமா? நிச்சயம் முடியாது. அதனால் தான் அன்னை மரியாள் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார். இந்த பாக்கியமும் அன்னை மரியாளுக்கு கிடைத்ததற்கு காரணம் கடவுள் அன்னை மரியாளை மிகச் சிறந்த காணிக்கையாக ஏற்றுக் கொண்டதுதான். விண்ணகம் சென்ற அன்னை மரியாளை ஒரு சாதாரண பெண்மணியாக நடத்தவில்லை அவரை விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டுகின்றார். இத்தனை சிறப்புமிக்க அன்னை மரியாள் கோவிலில் ஒப்புக்கொடுக்கப்பட்டது ஒரு அடையாள நிகழ்வாக மட்டுமில்லை அதுஒரு அர்த்தமுள்ள நிகழ்வாகவும் இருந்தது.

அன்னை மரியாள் கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுப்பதற்கு முன்னாலே சிறுவயது முதலே தன்னைக் கடவுளுக்கு அர்ப்பணித்து கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்தார். தன்னை முழுமையாக கடவுளின் திட்டத்திற்கு ஒப்புக் கொடுத்தவள் தன் வாழ்நாள் முழுவதும் தன் மகனுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்தார். கொடுப்பதன் அர்த்தம் யாருக்கு தெரியுமோ இல்லையோ அன்னை மரியாளுக்கு நன்கு தெரியும். தன் உறவினரான எலிசபெத் கருவுற்றிருக்கின்றாள் என்று கேள்விப்பட்டதும் தன்னுடைய உழைப்பைக் கொடுப்பதற்காகவும், தன்னுடைய நேரத்தைக் கொடுப்பதற்காகவும் அன்னை மரியாள் விரைந்து சென்று தன்னுடைய ஈகைக் குணத்தினை வெளிப்படுத்துகின்றார். திருமண விருந்தில் திராட்சை இரசமானது தீர்ந்து விடுகிறது அதனால் நமக்கென்ன என்று திருமண விருந்திற்கு வந்திருந்த அனைவரும் அதைப்பற்றிக் கவலைக் கொள்ளாமல் இருக்கும்போது, தன் மகனால் இந்தக் குடும்பத்திற்கு உதவ முடியும் என்று அந்தக் குடும்பத்திற்காக பரிந்து பேசி அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்த ஈகைக் குணத்திற்கு சொந்தக்காரர். இன்றும் தன்னுடைய ஈகைக் குணத்தால் எந்தவொரு மாறுபாடும் இல்லாமல் தொடர்ந்து நமக்காக பரிந்து பேசிக் கொண்டேயிருக்கிறார். அன்னையைப் போல் கொடுப்பதில் மகிழ்ச்சிக் காண்போம்.

**கொடுப்பது என்பது இழப்பது அல்ல**
**கொடுப்பது என்பது பகிர்வது**





பிரச்சனை இருந்தது. நான் அன்னையிடம் அழுது ஜெபித்தேன். டிசம்பர் 31-ம் தேதி குழந்தை பிறந்தது. இப்போது குழந்தைக்கு இரண்டு வயது ஆகின்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சகாயராணி – மேடவாக்கம்**

என் மகளின் பெயர் மோனிகா. அவளுக்கு திருமணமாகி இரண்டு வருடங்களாக குழந்தையில்லை. என் அக்கா இந்த ஆலயத்தைக் குறித்து சொன்னார்கள். இங்கு வந்து ஜெபித்தோம். இப்போது எங்களுக்கு ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**புவனேஷ்வரி, பிலிப்பு – மேடவாக்கம்**

என்னுடைய இரண்டாவது குழந்தைக்கு ஆறுமாதம் இருக்கும்போது வலிப்பு வந்தது. நான் ஆலயத்தின் வாசலில் நின்று அழுதேன். அப்போது ஒரு குருவானவர் அழைத்து ஜெபம் செய்தார். அடுத்த மாதத்திலிருந்து வலிப்பு வரவில்லை. இப்போது அவனுக்கு 8 வயது ஆகிறது. மேலும் வீடு கட்டுவதற்கு இடம் வாங்க இரண்டு லட்சம் கட்டினேன். அதன்மேல் கட்ட இயலவில்லை. அன்னையிடம் வந்து அழுது மன்றாடினேன். அதை கட்டி முடிக்கவும் அடுத்த இடம் வாங்குவதற்கும் அன்னை ஆசீர்வதித்தார். இப்போது வீடு கட்டிக்கொண்டு இருக்கின்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

அக்டோபர் மாதம் 5 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**ஜெனிபர் – கேளம்பாக்கம்**

எங்களுக்கு டிசம்பர் 27-ம் தேதி ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு, பிறந்த மூன்று மாதங்களில் எந்த பிரச்சனையும் இல்லை. கடந்த மார்ச் மாதம் குழந்தைக்கு கண்களிலிருந்து தண்ணீர் வந்து கொண்டே இருந்தது. அதனால் கண்ணுக்கு சொட்டு மருந்து போட்டும் எந்த பலனும் இல்லை. குரோம்பேட்டை கண் மருத்துவமனையில் ஒன்றரை மாதம் சிகிச்சை எடுத்தபிறகு ஜூன் மாதம் குழந்தைக்கு தடுப்பூசி செலுத்த பெருங்குடி மருத்துவமனைக்கு சென்றபோது அங்கிருந்த மருத்துவர் குழந்தைநல மருத்துவரை சந்தித்தபோது குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்யும்படி சொன்னார். அறுவை சிகிச்சை முடிந்த பிறகு கண்ணாடி போட வேண்டும் என்று மருத்துவர் கூறினார். அன்னையிடம் தொடர்ந்து மன்றாடினோம். மருத்துவரை சந்தித்தபோது கண்ணாடி தேவையில்லை என்று கூறினார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மைதிலி – கூவத்தூர்**

எனக்கு திருமணமாகி ஒரு வருடமாக குழந்தையில்லை. அதன்பின் ஜீவ அன்னையை பற்றி அறிந்தோம், இங்கு வந்து அழுது ஜெபித்தோம். மூன்றாம் மாதமே கருவுற்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**வினோலியா – சைதாப்பேட்டை**

எனக்கு திருமணமாகி ஐந்து ஆண்டுகளாக குழந்தையில்லை. இங்கு வந்து ஜெபித்தபோது மார்ச் மாதம் கருவுற்றேன். அதன்பின் நான் கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டேன். ஐந்தாம் மாதம் குழந்தைக்கு எந்த உறுப்புகளும் வளரவில்லை. இதுபோல் ஒவ்வொரு மாதம்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**தெளிந்த சிந்தனையின் மரியா**

ஒரு நடுத்தர வகுப்பை சார்ந்த குடும்பம் இருந்தது. அந்த வீட்டில் ஆறு பெண்களுக்கு எப்படி திருமணம் செய்து வைப்பது என்று குடும்பத் தலைவர் வருந்திக் கொண்டே இருந்தார். கவலைப்பட்டுக் கொண்டே ஒருநாள் மாரடைப்பு வந்துவிட்டது. மருத்துவமனையில் அவசர பிரிவில் இருக்கிறார். இவ்வேளையில் இவர் வாங்கி வைத்திருந்த லாட்டரி சீட்டிற்கு ஒரு கோடி ரூபாய் விழுகிறது. இந்த செய்தியை அவரிடம் சொன்னால், அவருக்கு மீண்டும் மாரடைப்பு வந்துவிடுமோ? என்று பயந்த மனைவி, டாக்டரை கூப்பிட்டு இந்த செய்தியை இதமாக சொல்லச் சொல்கிறார். டாக்டர் மிகவும் கூலாக அவரிடம் சென்று பேச தொடங்குகிறார். உங்களுக்கு லாட்டரியில் பத்து லட்சம் பரிசு விழுந்தால் என்னச் செய்வீர்கள் என்றார் டாக்டர்? நான் என் மூத்தப் பெண்ணிற்கு திருமணம் செய்து வைப்பேன் என்றார். சரி இருபது லட்சம் விழுந்தால் என்ன செய்வீர்கள் என்றார் டாக்டர். இரண்டாவது பெண்ணிற்கும் திருமணம் முடித்துவிடுவேன் என்றார் அவர். டாக்டர் மெதுவாக சரி ஒரு கோடி ரூபாய் விழுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள் என்ன செய்வீர்கள்? எனக்கெல்லாம் எங்க டாக்டர் ஒரு கோடி விழும்? அப்படி ஒருவேளை விழுந்தால் சத்தியமாக உங்களுக்கு 50 லட்சம் தருகிறேன் என்றார் அவர். எதிர்பாராத இன்ப அதிர்ச்சியில் டாக்டருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விட்டார். ஒவ்வொரு நாளும் புதுப்புது செய்திகளை கேட்கிறோம், பார்க்கிறோம், வாசிக்கின்றோம். மகிழ்ச்சியான செய்தியையோ, துக்கமான செய்தியோ அதிர்ச்சியூட்டும் செய்தியோ எதுவாக இருந்தாலும் நடுநிலையோடு அணுகுவதுதான் அழகு. வானதூதர் மரியாவிடம் இதோ கருவுற்று ஒரு ஆண் மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர் என்று மெசியாவின் பிறப்பை முன்னறிவித்தார். இறைவனுக்கு தாயாக போகிறேன் என்று மரியாள் குதித்து ஆடவில்லை, ஐயோ நான் ஒரு இளம்பெண் கன்னி என்று எழுந்து ஓடவும் இல்லை. நிதானமாக மனதில் இருத்தி சிந்தித்தார். இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை. அன்னை மரியாளின் வாழ்வோடு நம்முடைய வாழ்க்கையையும் ஒப்பிட்டு தியானித்து பழகும்போது இன்பமும் துன்பமும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்பது புரியும். ஆகவே அன்னையைப் போன்று நம் சிந்தனையை கவனிக்கும்போது மனம் அமைதி அடையும் வாழ்க்கை மென்மையாக அழகாக மாறும்.

# அர்ப்பணிக்கப்பட்டோரின் அரசியான மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

ஒவ்வொரு மாதமும் அன்னை மரியாவின் விழாக்களை சுமந்து வருகிறது. இறந்த நம்பிக்கையாளர்களை நினைவு கூறும் நவம்பர் மாதம் உத்தரிக்கும் நிலையில் இருக்கும் ஆன்மாக்களின் அன்னையாம் மரியாவுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. உத்தரிக்கிற ஆன்மாக்களின் சபை என்று கூட பொதுநிலையினருக்கு இருக்கிறது. அவர்கள் 10 நாட்கள் இந்த அன்னைக்கு விழா எடுப்பதும், இறந்த நம்பிக்கையாளர்களுக்காக ஒவ்வொரு நாளும் செபிக்கும் பழக்கமும் நிலவுகிறது. இம்மாதம் 19 ஆம் நாள் இறைப் பராமரிப்பின் மரியாவாக அன்னை நினைவு கூரப்படுகிறார். குழந்தை மரியா 3 வயதில் எருசலேம் ஆலயத்தில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட விழாவை திருஅவை 21 ஆம் நாள் கொண்டாடுகின்றது. அனைத்து விழாக்களிலும் அன்னை மரியா அர்ப்பணம் மிக்கவராகவே காட்சி தருகிறார். அவரது அர்ப்பண மனநிலையை ஆழ்ந்து தியானிக்க, புதுப்புது அர்த்தங்கள் நமக்கு வெளிப்படுகின்றன. எனவே மரியாவை அர்ப்பணிக்கப்பட்டோரின் அரசி என்றால் மிகையாகாது. அவரின் அர்ப்பணம் இறைவனுக்காக நேர்ந்து கொண்ட அனைவருக்கும் ஒரு மேல்வரிச் சட்டமாக அமைகிறது. சிறப்பாக துறவுவாழ்வின் விருப்பநிலையினருக்கு காணிக்கை அன்னை சிறந்த முன்மாதிரியாகக் காட்டப்படுகிறார். மரியா குழந்தை பருவத்திலேயே எருசலேம் திருக்கோவிலில் அர்ப்பணிக்கப்பட்டது போல, புதுமுகுத்துறவில் நுழையும் இளம்பெண்களின் அர்ப்பணம் மகிழ்வாகவும் முழுமையாகவும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் விருப்பநிலையினரின் நாளாகவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. அனைத்து நிலைகளிலும் அர்ப்பண மனநிலையுடன் சீடத்துவ வாழ்வை மேற்கொண்டு பயணிக்க நமது அன்னையின் அர்ப்பண விழா கூறும் செய்திகளை இக்கட்டுரையில் கண்டுணர்வோம்.

## குழந்தை மரியாவின் அர்ப்பணம்

இறைமகன் இயேசு பிறந்த நாளை டிசம்பர் 25 ஆம் நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றோம். அவர் கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட விழாவை பெப்ருவரி திங்கள் இரண்டாம் நாள் சிறப்பிக்கின்றோம். சட்டப்படி ஆண் குழந்தை பிறந்த 40 ஆம் நாள் அதன் தாய்க்குத் தூய்மைச் சடங்கு நிறைவேற்ற வேண்டிய நாள். அன்று ஆண் குழந்தையை எடுத்துக்கொண்டு பெற்றோர் jpUf Nfhtpyf Fr;nryy Ntz Lk; Vnddpy; ‘ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்” என்று திருச்சட்டம் கூறுகிறது. மரியாவும் யோசேப்பும் எளிய காணிக்கைகளை எடுத்துக்கொண்டு இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தனர். மரியாவும் சட்டத்திற்கு முன்பு தூய்மை பெற்றவரானார்.





பெறுவதற்கு விரும்பதக்கதாகவும் இருந்ததைக் கண்டு பெண் அதன் பழத்தை பறித்து உண்டாள். அதை தன்னுடனிருந்த கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான் (தொ.நூ 3.6)

என்ற இறைவார்த்தையை மேற்கோள் காட்டி பழைய ஏவாள் தனது கீழ்ப்படியாமையால் குழந்தைகளை பெற்றெடுக்கும்போது வேதனை அடைந்ததாக கற்பனையோடு சேர்த்து கூறுகிறார். அன்னை மரியா தமது கீழ்படிதலால் ஆண்டவர் கிறிஸ்துவை பெற்றெடுத்தார். பழைய ஏவாள் சாவை பெற்றெடுத்தார். புதிய ஏவாளாகிய அன்னை மரியா வாழ்வைப் (கிறிஸ்துவை) பெற்றெடுத்தார் என்று பெருமிதத்தோடு கூறுகிறார். இதேக் கருத்தை திரு அவையோடு ஒப்பிடுகையில் திருஅவை தினந்தோறும் குழந்தைகளை திருமுழுக்கினால் பெற்றெடுத்துக்கொண்டே இருக்கிறது. வேதனையில் இல்லை மகிழ்வில். ஆனால் திருஅவையிலிருந்து இறைமக்கள் சிறிதுசிறிதாக விலகிச் செல்லும்போது தாய்க்குரிய பாசத்தோடு திருஅவை வேதனை அடைகிறது என்று இக்கால கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

## குழந்தைகளைப் பெற்றெடுக்கும் திருஅவை

திருஅவை தினந்தோறும் குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும் அதுவும் ஒரு கன்னியே என்று புனித அகஸ்டின் கூறுகிறார். அன்னை மரியா கன்னி ஆவார். கன்னியாகவே இருந்து கிறிஸ்துவைப் பெற்றெடுத்தார். அத்திருச்சபை, கறை திரையோ, வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் தம்முன் விளங்குமாறு இப்படிச் செய்தார். (எபே 5.27) என்ற இறைவார்த்தையை மேற்கோள்காட்டி திருஅவையின் தூய்மையைத் தெளிவாக்குகிறார். அன்னை மரியா, தூய்மையாக இருந்து எவ்வாறு கிறிஸ்துவைப் பெற்றெடுத்தாரோ பெற்றெடுத்தும் கன்னியாக இருக்கிறாரோ திருஅவையும் தினந்தோறும் குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும் தூய்மையாகவும் கன்னியாகவும் இருப்பதை தெளிவுப்படுத்துகிறார். உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள் என்று தெரியாதா என்ற இறைவார்த்தையை மேற்கோள்காட்டி நாம் கிறிஸ்து வழியாக திருஅவையிலே உறுப்புகளாக நிலைத்திருக்க வேண்டும் என்கிறார்.

## திருஅவையின் உண்மைத் தன்மை

அன்னை மரியாள் திருஅவைக்கு உடல் சார்ந்த பிறப்பைக் கொடுத்தார் எனவும் திருஅவை உயிர் சார்ந்த பிறப்பை கொடுக்கிறது என்றும் கூறுகிறார். எனவே திருஅவை அனைத்து பிள்ளைகளுக்கும் ஆன்மீகத் தாயாக திகழ்கிறது என்று புனித அகஸ்டின் கூறுகிறார். அவர் அவர்களைப் பார்த்து இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகின்றவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள் என்றார். (லூக் 8.21) என்ற இறைவார்த்தையை மேற்கோள்காட்டி, இறைவார்த்தையைக் கடைபிடித்து வாழ்கின்ற இறைமக்கள், திருமணமானவர்கள், கடவுளுக்கு தங்களையே அர்ப்பணித்தவர்கள் அனைவருமே ஆன்மீக ரீதியாக கிறிஸ்துவின் தாயாக மாறுகிறார்கள் என்று புனித அகஸ்டின் கூறுகிறார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

13



சென்ற மாத கட்டுரையில் அன்னை மரியாவின் கன்னித்தன்மையைப் பற்றிப் பார்த்தோம். இந்த மாத கட்டுரையில் அன்னை மரியாவையும் திரு அவையையும் இணைத்து புனித அகஸ்டின் கூறும் கருத்துக்களைப் பற்றி பார்ப்போம்.

**அன்னை மரியாவும் திருஅவையும்**

அன்னை மரியாவையும் திரு அவையையும் இணைத்து புனித அகஸ்டின் கூறும் கருத்துக்கள் பல. அவை புனித ஜஸ்டின் மற்றும் புனித ஐரேனியுஸ் போன்றோரின் கருத்துக்களை ஒத்திருக்கிறது. புனித அகஸ்டின் திருஅவையை எப்போதும் முதன்மைபடுத்துகிறார்.

அன்னை மரியாவின் திருவயிற்றை திருஅவையின் வயிற்றோடு ஒப்பிடுகிறார். அன்னை மரியா கிறிஸ்துவை தமது வயிற்றில் தாங்கினார். அன்னை மரியா தமது வயிற்றில் இருந்த கிறிஸ்துவுக்கு காற்று, நீர், இரத்தம் என அனைத்தையும் தந்து வளர்க்கிறார். அது போல திரு அவையும் தாயாக இருந்து தனது அனைத்துக் குழந்தைகளையும் அன்பிலும் நம்பிக்கையிலும் நல்லொழுக்கத்திலும் வளர அனைத்து நலன்களையும் தந்து வளர்க்கிறது என்று புனித அகஸ்டின் உருவகப்படுத்துகிறார். அன்னை மரியா தமது மகனை ஒற்றுமையிலே வளர்த்தெடுத்தார். அதுபோல திருஅவையும் எல்லோரையும் ஒற்றுமையில் வாழ ஒற்றுமையின் அன்னையாக திகழ்கிறது. பார்ப்பதற்கு பல மக்கள் பல நிறங்களில் இருந்தாலும் திருஅவையில் அவர்கள் வருகிறபோது அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் போல ஒற்றுமையில் வாழ திருஅவை எப்போதும் விருப்பப்படுகிறது.

அன்னை மரியா கிறிஸ்து தமது உதிரத்தில் வளர சதையைக் கொடுத்தார் என்றும் தாயாம் திருஅவை தம்முடைய குழந்தைகள் வளர ஆவியை கொடுப்பதாக குறிப்பிடுகிறார். திருஅவை திருமுழுக்கு என்ற அருளடையாளத்தின் வழியாக தினந்தோறும் குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும் அது அன்னை மரியாவைப் போல கன்னியாக திகழ்கிறது என்றும் கூறுகிறார்.

**அன்னை மரியாவின் கீழ்ப்படிதல்**

அன்னை மரியாவின் கீழ்படிதலைப் பற்றி புனித அகஸ்டின் எடுத்துரைத்து அதை பழைய ஏவாளோடு ஒப்பிடுகிறார். பழைய ஏவாளோடு ஒப்பிட காரணம் கீழக்கண்டவாறு தருகிறார், பழைய ஏவாள் கடவுளுக்கு கீழ்ப்படியவில்லை. அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்கு களிப்புட்டுவதாகவும் அறிவு





மரியாவுக்கு மூன்று வயது நிறைவுற்றபோது எருசலேம் கோவிலில் அவரை அர்ப்பணித்ததாக மரபு செய்திகள் கூறுகின்றன. இவ்வேளையில் மற்றுமொரு நிகழ்வு நமது சிந்தனையில் மேலோங்கி நிற்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் லேவியர் நூல் 12 ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது. ஆண்டவர் மோசேயிடம் கொடுத்த திருச்சட்டப்படி ஒரு தாய் ஆண் பிள்ளையை பெற்றெடுத்தால் 40 நாட்களும், பெண் குழந்தையைப் பெற்றெடுத்தால் 80 நாட்களும் தனித்திருக்க வேண்டும். இந்த தூய்மையடையும் காலக்கெடுவிற்குப் பின்னர் அந்தப் பெண், ஓராண்டு நிறைவுற்ற செம்மறி ஒன்றை எரிபலியாகவும், புறாக்குஞ்சு அல்லது காட்டுப்புறா ஒன்றை பாவம் போக்கும் பலியாகவும் குருவிடம் சந்திப்புக் கூடார நுழைவாயிலுக்குக் கொண்டு வர வேண்டும். ஆட்டுக்குட்டி கொண்டு வர வசதி இல்லாதவர் இரண்டு காட்டுப் புறாக்களையோ அல்லது புறாக் குஞ்சுகளையோ கொண்டு வந்து ஒன்றை எரிபலியாகவும் மற்றதை பாவம் போக்கும் பலியாகவும் படைக்க குரு அப்பெண்ணைத் தூய்மைப்படுத்துவார். மரியா பிறந்த நாளை செப்டம்பர் 8 ஆம் நாள் கொண்டாடுகின்றோம். ஆனால் 76 ஆம் நாளான நவம்பர் 21 அன்று அவரின் அர்ப்பண விழாவை நினைவுகூர்கின்றோம். அவரது மூன்றாவது வயதில் நிகழ்ந்த அர்ப்பணத்தைச் சிறப்பிக்கின்றோம். நிச்சயமாக அன்னாவும் சுவக்கீனும் தவத்திலும் செபத்திலும் நிலைத்திருந்து இறை அருளால் பெற்றெடுத்த குழந்தையை பிறந்த 80 ஆம் நாள் எருசலேம் ஆலயத்திற்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும். தனது தாய்க்கும் தனக்கும் செய்யப்பட்ட தூய்மைப்படுத்தும், காணிக்கை அளிக்கும் சடங்குகளை தனது மகனுக்கும் மரியா நிறைவேற்றினார். இத்தகைய விவிலியத் தொடர்பு நம்மை இன்னும் அதிகமாகவே நமது அர்ப்பணத்தின் ஆழத்திற்கு அழைத்துச் செல்கிறது.

**சிறுமி மரியாவின் அர்ப்பணம்**

மெசியாவின் தாயாக இருக்க வேண்டிய மரியா ஒரு சாதாரண வீட்டுச் சூழலில் வாழ்ந்தால் முழுமையான வளர்ச்சி பெற இயலாது என்பதால் தூய ஆவியார் அவரின் பெற்றோர் வழியாக அவரை ஆலயத்தில் வளர விடுகிறார். இயல்பிலேயே இறைபக்தி, இறைஞானம் நிறைந்த அவரை அதில் இன்னும் வளர்ச்சி பெறுவதற்கு ஆலயமே அவருக்குத் தகுந்த கல்விக்கூடமானது. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஐந்து காயம் வரம் பெற்ற புனித ஆனி கேத்ரின் எமரிக், சிறுமி மரியாவின் அர்ப்பணித்தல் விழாவைக் காட்சியில் கண்டு மகிழ்ந்தார். சுருக்கமாக இக்காட்சி இங்கு தரப்படுகிறது. குருக்களும், தோழியரும், பெற்றோரும் புடைசூழ அரசரின் திருமணப் பாடலான திருப்பாடல் 45 இசைக்கப்பட ஆன்மீக அழகுடன் சிறுமி காணப்பட்டாள் என்றும், ஆண்டவரின் மாட்சி திருக்கோவிலை நிரப்பியதாகவும் அக்காட்சி விவரிக்கின்றது. மேலும் மரியின் மார்பு முன்பாக இறுதி உணவின் போது பயன்படுத்தப்பட்ட இரசப் பாத்திரம் ஒன்றும், அவரது வாயின் அருகில் சிலுவை அடையாளம் வரையப்பட்ட ரொட்டியும் காணப்பட்டதாகவும் புனிதை கூறுகிறார். மரியின் ஆசிரியராக ஆலயத்தில் அவரை ஆன்மீகத்திலும் ஞானத்திலும் வளர்த்து எடுத்தவர்கள் நகோமியும் இறைவாக்கினர் அன்னாவும் ஆவர். சிறுமி மரியா மிகவும் ஆர்வத்தோடு வேகமாக திருநூலைக் கற்றார். மறைவாக யூதர்களின் மீட்புக்காக அதிகம் இறைவேண்டல் செய்தார். நடு இரவில் ஆழ்ந்த அமைதியில்

தூக்கத்தினின்று விழித்தெழுந்து செபித்தார். செபத்தின் போது அடிக்கடி கண்ணீர் வடியும். அவ்வேளைகளில் இறைப்பேரொளி அவரைச் சூழ்ந்து காணப்பட்டது. எப்போதும் நீல நிற ஆடையில் காணப்பட்டார். மரியாவின் சுறுசுறுப்பான குழந்தைப் பருவம் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

**அர்ப்பணத்தின் அரசி**

அன்னை மரியாவின் அர்ப்பண விழா நமக்கு நிறைய பாடங்களைக் கற்றுத் தருகின்றன. அவைகளுள் மிக முக்கிமானவை: சிறப்பான தனி அழைப்பு, இறைவிருப்பத்தை நிறைவேற்றுதல், தியாகம் நிறை வாழ்வு. இந்த மூன்று அம்சங்களும் அவரது குழந்தைப் பருவ வாழ்வின் மூன்று நிலைகளோடு தொடர்புடையன. மூன்று வயது ஆவதற்கு முன்பே மரியாவின் தாய் அவரை மிகக் கவனமாக வீட்டிலே தனியாக அவருக்கென்று இடம் ஒதுக்கி அவரைக் கவனித்ததாகவும் அறிய வருகிறோம். இயேசுவுக்கு 72 சீடர்கள் இருந்த போதிலும் தனக்கென்று திருத்தூதர்களாக 12 பேரை மட்டும் தேர்ந்தெடுத்தார். அவர்களுக்காக சிறப்பாக இறைவேண்டல் செய்தார். தனக்குபின் தான் தொடங்கி வைத்த இறையாட்சிப் பணி தொய்வில்லா இயக்கத் தன்மையுடன் தொடர்ந்து ஆற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். சிறந்த பயிற்சியை அவர்களுக்கு அளித்தார். புனித பவுலடியார் மிக அழகாகக் கூறுவார். கடவுளின் நற்செய்திப் பணிக்கென நான் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறேன். ஆம், கிறிஸ்தவர்கள் எல்லாரும் இயேசுவின் சீடத்துவத்தை வாழ திருமுழுக்கு வழியாக அழைப்பு பெற்றிருந்தாலும், அர்ப்பணிக்கப்பட்டோர் இறைவனால் அழைக்கப்பட்டு அருள்பொழிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வுலகைப் புதுப்பிக்கும் ஆவியாரின் அர்ச்சிப்புப் பணியில் தம்மை இவர்கள் இணைத்துக் கொள்கின்றனர்.

இரண்டாவதாக, அன்னா-சுவக்கீன், குழந்தை இயேசுவை கோவிலில் எளிய காணிக்கைகளோடு தூய்மைச் சடங்குகளை நிறைவேற்றச் சென்ற இந்த இரண்டாவது நிலை திருச்சட்டங்களை மதிக்க நமக்கு அழைப்பு விடுக்கிறது. கடவுளின் சிறப்பான அருளை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பதை உணர்ந்த போதிலும் சட்ட திட்டங்களுக்குப் பணிந்து மென்மேலும் இறைவனுக்குப் பிரியமானார்கள். திருச்சட்டத்தை நிறைவேற்றவே வந்தேன் என்று இயேசு கூறினார். ஆண்டவரின் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர் என்று திருப்பாடல் கூறுகிறது. ‘ஆண்டவரது உடன்படிக்கையையும் ஒழுங்குமுறையையும் கடைப்பிடிப்போருக்கு அவருடைய பாதைகளெல்லாம் பேரன்பும் உண்மையும் உள்ளனவாய் விளங்கும்” (தி.பா. 25:10). இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டோர், திருஅவை, தான் சேர்ந்திருக்கும் துறவற சபையின், இச்சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்குப் பணிந்து நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைய உலகம் சுதந்திரமாக இருக்க விரும்புகின்றது. இளைஞர்கள் தான் விரும்பியது போலவே வாழ்வதே சுதந்திரம் என்று நினைக்கின்றார்கள். இச்சூழலில் அர்ப்பணிக்கப்பட்டோர் அனைத்தையும் துறந்து ஆண்டவரையே பற்றுக் கோலாகப் பிடித்து வாழ்ந்து வருகிறோம். நாமும் அகவிடுதலை தரும் சட்டங்களை மதிப்போம். அப்போது உள்ளத்தில் பரிபூரண சுதந்திர உணர்வு

தொடர்ச்சி 13 -ம் பக்கம்...........





அதியற்புதமான கீழ்ப்படிதல் என்னும் புண்ணியத்தினை அன்னை மரியாவிடம் விளங்கச் செய்தது உந்நத கடவுளின் அதியற்புதமான செயலே!

சிமியோன் குழந்தை சேசுவை பற்றி கூறியபோது அன்னை மரியாள் வெகுண்டெழவில்லை. சிமியோனிடம் சண்டையிடவில்லை. முணுமுணுக்கவில்லை. மாறாக இவை அனைத்தையும் தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார்கள். உள்ளம் வியாகுலத்தால் சூழப்பட்டபோதும் கடவுளின் திருவுளத்திற்கு அன்னை மரியாள் மறுப்பேதும் செய்யாமல் அமைந்த மனதோடு எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறார். அன்னையின் மாசற்ற இருதயம் தேவசிநேக அக்னியால் நிரம்பியிருந்ததே இதற்கு காரணம். அன்னை மரியாள் இந்த வியாகுலத்தை கடவுள் மீது தான் கொண்ட நேசத்திற்காகவும், மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காகவும் ஏற்றுக் கொண்டார்கள். அன்னை மரியாவின் இருதயம் தேவசிநேக அக்னியால் பற்றி எரியச் செய்தது உந்நதக் கடவுளின் வல்ல செயலே!.

**பொதுநிலையினரின் பார்வையில் அன்னையின் முதல் வியாகுலம்:**

பொது நிலையினராகிய நாம், அன்னை மரியாவின் முதல் வியாகுலத்தை தியானிக்கும் போது, அந்தஸ்தின் கடமைகளை முணுமுணுக்காமல் செய்தல், திருச்சபை கட்டளைகளையும், பத்துக் கற்பனைகளையும் கடவுளை மகிமைபடுத்தும் நோக்கத்தோடு கடைப்பிடித்தல், ஆழ்ந்த தாழ்ச்சி மற்றும் தேவ சிநேகத்தால் நிறைந்திருத்தல், பிறரின் சொல்லாடல் நம்மை காயப்படுத்தினாலும் பொறுமையைக் கடைபிடித்தல் ஆகிய நற்பண்புகளில் நாம் வளர வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறாயின் வியாகுல மாமரியையும், உந்நத கடவுளையும் மகிமைபடுத்தும் நல்ல கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக வாழலாம். வியாகுல மாமரி மூலமாக உந்நத கடவுளின் அபிரிமிதமான ஆசீர்வாதங்களை உறுதியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

வியாகுல மரியே வாழ்க!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள்

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

பெருமை பாராட்ட விரும்புபவர், "நானே ஆண்டவர் என்பதை அறிந்து புரிந்து கொள்வதிலும் பேரன்போடும் நீதியோடும் நேர்மையோடும் உலகில் நான் செயலாற்றுகிறேன் என்பதிலும் பெருமை பாராட்டுவராக! ஏனெனில் இவற்றில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்கிறார் ஆண்டவர்.(எரே.9:24) என்னும் இறைவார்த்தையின் படி கடவுளை மகிழ்ச்சி படுத்த நாம் அவரை பெருமை பாராட்ட வேண்டும். எவ்வாறு? "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது" (லூக்.1:47) என்று கடவுள் செய்த அரும்பெரும் செயல்களை தியானித்து கடவுளுக்கு நன்றி செலுத்துவதே சிறந்த வழி.

**அரும்பெரும் செயல்: அன்னை மரியாவின் முதல் வியாகுலம்:**

சிமியோன் அன்னை மரியாவிடம், "இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்" (லூக்.2:34-35) என்று கூறும் நிகழ்வை, அன்னை மரியாவின் முதல் வியாகுலமாக தியானிக்க பரிசுத்த திருச்சபை நமக்கு கற்றுத் தருகிறது. இந்நிகழ்வில் கடவுளின் அரும்பெரும் செயல்களை புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

யூத சமயச் சட்டத்தை நிறைவேற்ற மரியாவும் யோசேப்பும் சேசுவை கோயிலுக்கு கொண்டு செல்கின்றனர்.(லேவி.12:3) அங்கே சிமியோன் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். இந்நிகழ்வில் நம் வாழ்க்கையை பொருத்திப் பார்க்கும்போது கடவுளின் அரும்பெரும் செயலை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். உந்நத கடவுளின் ஒரே மகனை தன் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த அன்னை மரியாள் கடுகளவும் பெருமை கொள்ளாமல் மோசேயின் திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிகிறார்கள்.





# அன்னையின் (71) திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## அன்னையின் திரு இரத்தத் திருத்தலம், ரே – இத்தாலி - 3

(Madonna del sangue, Re – Italy)

புதுமைமிகு அன்னையின் ஓவியத்தை பற்றிய செய்தி பியமொன்தே மகாணத்தின் விகென்சோ பள்ளத்தாக்கிற்கு அப்பாற்பட்டு பரவ ஆரம்பித்தது. இங்ஙனம் அன்னையின் புகழ் பரவ காரணமாயிருந்தவர்கள் அப்பகுதியிலிருந்து வேலைநிமித்தமாக புலம்பெயர்ந்தவர்கள் ஆவர். மலைத்தொடர்கள் நிறைந்த அப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் புகைபோக்கி இருக்கும். குளிர்காலங்களில் வீட்டின் வெப்பத்தை சீராக வைக்கவும், குளிர் காயவும் வீட்டின் அனைவரும் கூடும் அறையில் நெருப்புமூட்டி குளிர்காய்வதும், அதிலிருந்து எழும் புகையை, புகைகூண்டின் வழியே வெளியே அனுப்புவதும் வழக்கமாக இருந்தது. அதே நேரத்தில் அப்புகைக் கூண்டில் படியும் அழுக்கை ஒவ்வொரு ஆண்டும் சுத்தம் செய்வதும் இன்றியமையாததாகும். புகைக்கூண்டு குறுகியதாக இருந்ததால் எல்லோரும் அதில் நுழைந்து சுத்தம் செய்ய இயலாது. எனவே, அதைச் சுத்தம் செய்ய மெலிந்த உடல்தேகம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அத்தகைய உடல்வாகு கொண்ட சிறுவர்களே அப்பணியில் பெரும்பாலும் ஈடுபடுத்தப்பட்டனர். அதிலும் குறிப்பாக ரே அமைந்திருந்த விகென்சோ பள்ளத்தாக்கிலிருந்தவர்கள் அப்பணியை திறம்படச் செய்த காரணத்தினால், அவர்கள் அச்சுற்றுப்புறத்தையும் தாண்டி, அருகில் இருந்த நாடுகளுக்கும் சென்று இப்பணியை மேற்கொண்டனர். அங்ஙனம் சென்றவர்கள் தங்களின் நெஞ்சத்திற்கு நெருக்கமான ரே திருத்தல அன்னையான திரு இரத்தம்

சொரிந்த அன்னையின் திருஉருவப்படத்தையும் எடுத்துசென்று தங்கள் இல்லங்களில் நிறுவினர்.

அங்ஙனம் புலம்பெயர்ந்த குடும்பங்களில் ஒன்று அன்னா ஸிர்ஸ்பெர்கர் என்பவரின் குடும்பமாகும். அவர்கள் இன்றைய செக்கோஸ்லாவியாவில் உள்ள கிளடோவிக் என்கிற நகரில் வாழ்ந்து வந்ததனர். கி.பி. 1685 ஆம் ஜீலை 8ஆம் தேதி அன்னாவின் வீட்டிலிருந்த திருஉருவப்படத்திலும் இரத்தம் சொரிந்தது. ஆண்டவரின் வியத்தகு கருணையை எண்ணி வியந்தனர் அப்பகுதி மக்கள். மிகுந்த பக்தி வணக்கத்தோடு அத்திருபடத்தை அந்நகரில் பேராலயத்தில் ஒப்படைத்தனர். இன்றளவும் அப்படமானது பேராலய மையப்பீடத்தின் மேல் வைக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்படுகிறது.

ரே அன்னையின் புகழ் பரவ பரவ, அப்பகுதிகளில் உள்ள பல ஆலயங்களில் அன்னைக்கான பீடங்கள் ஏற்படுத்தப்பட்டன. ரோடுகள் சந்திக்கும் இடங்களிலும், பலரின் வீட்டு வளாகங்களிலும் ரே திருத்தல அன்னைக்கு குருசடிகள் கட்டப்பட்டன. ரேவில் இருந்த மௌரிசியோ பங்கு ஆலயமும் காலஓட்டத்தில் பழுதடைந்திருந்தது. எனினும், அங்கு பாதுகாப்புடன் வணக்கம் செலுத்தப்பட்ட அன்னையின் திருஉருவத்தை காணவும், அன்னையின் பரிந்துரையை நாடியும் மக்கள் வந்தவண்ணமாயிருந்தனர். திருப்பயணிகளின் நலன் கருதி அந்த ஆலயத்தை விரிவுப்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவை முழுத்திட்டமாக உருவெடுக்க பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை காத்திருக்க வேண்டியிருந்தது. கி.பி. 1894ஆம் ஆண்டு இப்புதுமையின் நான்காம் நூற்றாண்டு நினைவானது சிறப்பாக கொண்டாடப்பட்டது. அந்நாட்களில் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி. பெர்ரேத்தி புதிய ஆலயக் கட்டுமான பணிகளுக்கான ஒரு குழுவை ஏற்படுத்தினார். மேலும் அப்பகுதியை சார்ந்த புகழ்பெற்ற மனிதர்களின் உதவியும் கோரப்பட்டது. இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைப்பவராக நொவாரா நகர் ஆயரின் சகோதரரான பொறியாளர் புல்சியானோ நியமிக்கப்பட்டார். அக்குழு உடனடியாக தன் பணிகளை தொடங்கியது. ஆலயத்தை கட்ட தகுதியான கட்டிடகலை நிபுணரை கண்டுபிடிப்பதை தன் முதன்மையான பணியாக அக்குழு கொண்டது. அவர்களின் தேடிலின் பலனாக கண்டுபிடிக்கப்பட்ட கட்டிடகலை நிபுணர் ஸ்புருகாச்சி, ஆலய மாதிரி ஒன்றை வடிவமைத்து கி.பி. 1903ஆம் ஆண்டு அளித்தார். ஆனால், அம்முன்மாதிரி வடிவம் பெரும் வரவேற்பை பெறவில்லை. எனவே, மற்றொரு நிபுணரை தேடும் பணிகள் தொடங்கின.

விகென்சோ பள்ளத்தாக்கிலிருந்து சலேசிய சபையில் குருவாயிருந்த அருட்பணி. புராத்தா தன்னை இப்பணியில் உத்வேகத்துடன் இணைத்துக் கொண்டார். அவரின் பெருமுயற்சியால் பொறியாளரும் கட்டிடகலை நிபுணருமான எதுவார்தோ கொலாமரினி அருட்பணி. பெர்ரேத்தி அவர்களுக்கு கி.பி. 1905ல் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். கி.பி. 1906ஆம் ஆண்டு எதுவார்தோ ரே கிராமத்திற்கு வந்து ஆலயம் அமைய வேண்டிய இடத்தை





இழப்பை போக்கியதோடு ஏழைகளுக்கும் சமுதாயத்தால் தாழ்த்தப்பட்டிருந்த அனைவருக்கும் நிறைவான உணவளிக்க இவ்வாலோசனை உறுதுணையாக இருந்தது.

இவ்வாறு மரியாவின் நல்லாலோசனை பல நன்மைகளை உலகில் வேரூன்றச் செய்யும் நங்கூரமாக இருக்கிறது. இயேசு மனித மீட்புக்கான ஆலோசகியாக அன்னை மரியாவை நியமித்திருக்கிறார். அதனை தாய்மையின் உருவில் மரியா செயல்படுத்துகிறார். ஏனெனில் தாயின் ஆலோசனையும் அவரது அறிவுரையும் பலரது வாழ்விற்கு விடிவெள்ளியாகத் தோன்றி வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழி அமைத்திருக்கிறது. இதன் உண்மையை யோவான் 19.26-27 –ல் அம்மா இவரே உன் மகன், இவரே உன் தாய் என்ற சொற்கள் தெளிவுப்படுத்துகிறது. மரியா நமது தாயாக நமக்கு ஆலோசனைக் கூறி நம் மீட்பின் வழிகாட்டியாகிறார். ஏன், இத்திருச்சபை உருவாக, வளர, நிறைந்து கனிதர ஆதி காரணமாகவும் சிறந்த உரமாகவும் இருந்தது மரியாவின் நல்லோசனையே

ஏனெனில் இயேசுவின் இறப்பிற்கு பிறகு உடல் சோர்ந்து உள்ளம் திகைத்து ஓடி ஒளிந்த திருத்தூதர்களை ஒன்றிணைத்து அவர்களை தேற்றி அரவணைத்து ஆலோசனை வழங்கி திருச்சபைக்கு புத்துயிர் ஊட்டுகிறார். பேதுரு தனது பழைய வாழ்க்கையைத் தேடிபோக முற்படுகின்றார். மரியின் ஆலோசனை தடுத்து நிறுத்தி புதிய வாழ்விற்கு பாதை காண்பிக்கிறது. இவ்வாறு தனது மகனின் பாடுகளின்போதும் இறப்பின்போதும் அவரை மறுதலித்தவர்களையும் அவரைவிட்டு ஓடி ஒளிந்தவர்களையும் தேடி கண்டுபிடித்து நேசக்கரம் நீட்டி ஆலோசனை வழங்குகின்றார் மரியா.

இன்று பல நேரங்களில் பல வழிகளில் நாம் பாதை மாறிச் செல்லும்போது நல்லாலோசனைகளை வழங்கி நமக்கு பாதை காட்டுகிறார் அன்னை மரியா. மரியாவின் வாழ்வு முழுவதுமே நமது வாழ்விற்கான ஆலோசனைகளின் ஊற்றாக இருக்கிறது. மரியாவின் பாடலில் வருகின்ற கருத்துகளும் அவரது அழைத்தலின்போது அவர் அளிக்கும் பதில் மொழிகளும் நல்லாலோசனைகளை நமக்குத் தரும் அமுத சுரப்பிகளாக சுடர் விடுகின்றன. இவ்வாறு அன்று முதல் இன்று வரை ஆன்மீக ஆலோசகியாக இருந்து நமது வாழ்வு பயணத்தில் நம்மை வழிநடத்தும் மரியா, நல்லாலோசனை மாதா எனப் போற்றப்படவும் நமது வணக்கத்திற்கு உரியவரெனக் கருதப்படவும் தகுதியானவரே.

கி.பி. 14-ம் நூற்றாண்டில் நல்லாலோசனை மாதாவிற்கு ஒரு ஆலயம் எழுப்பப்பட்டதோடு 1356-ல் தூய அகுஸ்தினார் சபையினரின் பொறுப்பில் விடப்பட்டது. அப்போது இவ்வாலயம் அழிவின் விளிம்பில் இருந்ததால் அடுத்த நூற்றாண்டில் பெட்ருயா என்னும் தன்னார்வமிக்க விதவைப் பெண்மணி தனது சொத்துக்களை விற்று புதிய ஆலயம் கட்டினார்.

1467-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் நாள் அந்நகரம் முழுவதும் புனித மாற்குவின் விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில் வெண்மேகமானது ஊரின் வழியாகச் சென்று பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த கட்டச் சுவர்களின்மீது அமர்ந்தது. அங்கே மரியா தனது குழந்தை இயேசுவுடன் இருக்கும் ஓவிய வரைபடத்தை கூடியிருந்த மக்கள் கூட்டம் கண்டு வியந்தது. அதே நேரம் அல்பேனியாத் திருப்பயணிகள் இருவர் இவ்வுருவப்படம் அல்பேனியாவிலிருந்து இங்கு நகர்ந்து வந்திருப்பதாகவும் அதை அவர்கள் வெகுநாட்களாக தேடிக் கொண்டிருப்பதாகவும் கூறினர். இரண்டாம் உலகப் போரின்போது கூட இவ்வுருவப்படம் அழிவுக்கு உள்ளாகவில்லை.

திருத்தந்தை 2-ம் பவுல் (1464-1471) நல்லாலோசனை மாதா வணக்கத்துக்குரியவர் என அங்கீகாரம் வழங்கியதைத் தொடர்ந்து 1662 –ல் அவரது திருவுருவத்திற்கு திருத்தந்தை 11-ம் இன்னசென்ட் மணிமுடி கட்டினார். சுயமுனைவு மறுமலர்ச்சி காலத்தில் புனித அகுஸ்தினார் சபையினர் தங்கள் சபையினை நல்லாலோசனை மாதாவுக்கென சமர்ப்பித்தனர். திருத்தந்தை 13-ம் லியோ நல்லாலோசனை மாதாவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்னும் வேண்டுதல் செபத்தை லொரேட்டா மன்றாட்டு மாலையில் இணைத்தார். பிறகு 1753-ல் திருத்தந்தை 14-ம் பெனடிக்ட் நல்லாலோசனை மாதாவுக்கென பக்தி ஒற்றுமையை மக்களிடம் வளர்த்திட பரிந்துரை செய்தார்.

**நற்செய்தியில் உலாவரும் நல்லாலோசனை மாதா**

கானாவூர் திருமணத்தில் இயேசு செய்த முதல் புதுமை மக்களின் நலனை மையப்படுத்தி இருக்கின்றன. இதில் மரியாவின் ஆலோசனை ஒரு அம்சமான இடத்தைப் பெற்றிருக்கிறது. திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்னும் கூற்று இயேசுவின் பணிவாழ்விற்கு முன்னுரை அமைத்துக் கொடுத்தது. இயேசு தன் பணி தொடர மரியாவின் ஆலோசனையே தொடக்கமாக இருந்தது. அவரது ஆலோசனையைத் தொடர்ந்து இயேசுவின் புதுமையினால் இறை மகிமை வெளிப்பட்டது. அதைப்போல அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள் எனும் மரியாவின் ஆலோசனை திருமண விழாவில் மையம் கொண்டிருந்த பெரும் பிரச்சனைக்கு தீர்வு கண்டது. திருமண வீட்டாருக்கு ஏற்படவிருந்த





பார்வையிட்டார். இருவரும் குறுகிய காலத்தில் நெருக்கமான நண்பர்கள் ஆனார்கள். எதுவார்தோ அங்கிருக்கும் இயற்கை சூழல் பாதிப்படையாமல் ஆலய கட்டுமான பணிகளை மேற்கொள்ள தேவையான முன்னேற்பாடுகள் குறித்தும், எளிதில் கிடைக்க கூடிய கட்டுமானப் பொருட்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். பெரத்தியும் ஆலய மாதஇதழ் வழியாக ஆலய கட்டுமான தயாரிப்புகள் குறித்து செய்தி வெளியிட்டார். இது அப்பிரதேசம் முழுவதும் பரவலான எதிர்பார்ப்பையும், அதே நேரத்தில் பழைய ஆலயம் மற்றும் தாங்கள் நன்றி காணிக்கையாக அளித்த பொருட்களின் நிலைக்குறித்த மக்களின் கவலையையும் வெளிப்படுத்தின. பெரேத்தி அவற்றை குறிப்பால் உணர்ந்து பழைய ஆலயமும் காணிக்கை பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் இடமும் எவ்வித சேதமுமின்றி, பழமை மாறாமல் பாதுகாக்கப்படும் என்று வாக்களித்தார்.

கி.பி. 1910ஆம் ஆயர் காம்பா அவர்கள் திருத்தந்தை பயஸ் அவர்களிடம் ஆலய நிர்மாணப்பணிகளுக்காக சிறப்பு ஆசீர் பெற்றார். கி.பி. 1912ஆம் ஆண்டு எதுவார்தோ ஆலய வரைப்படத்தை மறுசீரமைத்து ரே கிராம நிர்வாக குழவிடமும், கிராமசபையிடமும் பொது வழிபாட்டுக்கான இடம் என்ற உத்தரவை கி.பி. 1912ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் தேதி பெற்றார். குட்டிட தயாரிப்பு பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும்போதே முதல் உலகப்போர் தொடங்கிய காரணத்தினால் பணிகள் அனைத்தும் நின்றுபோயின. ஊலகப் போர் நிறைவுற்று ஓரளவு அமைதி திரும்பிய பின் ஆலயப் பணிகள் முழுவீச்சுடன் தொடங்கின. கி.பி. 1922 ஆம் ஆண்டு ஆகஸ்டு 5ஆம் தேதி கர்தினால் காம்பா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலயக் கட்டுமான பணிகள் நடைபெற்றபோது, பழைய ஆலயத்தில் இருந்த புனித சூசையப்பர் மற்றும் புனித கார்லோவுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட பீடங்களும், அன்னையின் திருஇரத்தம் வணக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்த பீடமும் முழுமையாக பாதுகாக்கப்படவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையே. ஆலயத்தின் பீடப்பகுதியும் மையப்பகுதியும் கட்டிமுடிக்கப்பட்டு இறைமக்களின் பயன்பாட்டிற்காக கி.பி. 1928ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அர்ச்சிக்கப்பட்டது. ஆலயப்பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போதே இப்பணிகளின் முன்னோடியாக விளங்கிய அருட்பணி. பெர்ரேத்தி அவர்கள் கி.பி. 1929ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி இறைவனடி சேர்ந்தார். எனவே, ஆலயப் பணிகளில் தொய்வு ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் ஆலயப்பணிகளை தொடர இயலாமல் செய்தன. போர் முடிந்தபிறகு, கி.பி. 1947ஆம் ஆண்டு ஜீலை 10ஆம் நாள் அருட்பணி. தெஸ்தா மற்றும் அருட்பணி. கர்தானோ அவர்களிடம் அப்பணிகளானது ஒப்படைக்கப்பட்டது.

அன்னையின் பக்தி முயற்சி குழுக்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தன. ஒவ்வொரு குடும்பத்தையும் அனுதின சேகரிப்பில் ஈடுபட உற்சாகப்படுத்தின. இங்ஙனம், சாதாரண ஏழை, எளிய மக்களின்

பங்களிப்பும் ஆலயப்பணிகள் தொடர்ந்து நடைபெற உதவியாயிருந்தன. பல்வேறு இடர்பாடுகளை கடந்து வானுய கட்டப்பட்ட ஆலயமானது திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதரின் ஆசியோடு, கி.பி. 1958ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4-5 தேதிகளில் ஆயர் கிரேமங்கி அவர்களால் அர்ச்சித்துப் புனிதப்படுத்தப்பட்டது.

அன்னையின் அரவணைப்பில் ஆண்டவரை நோக்கி செல்லும் நம் பயணத்தை இறைவன் ஆசீர்வதிப்பாராக!




திருப்பயணம் தொடரும்...........





# மாதா மன்றாட்டு மாலை

13



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

**நல்லாலோசனை மாதாவே**

அறிவுரைகள் ஆயிரமாயிரம்
அகிலத்தில் தோன்றிடினும்
அன்னையின் ஆலோசனையே
அழியாமல் வாழ்வாகிடுமே


இன்றைய உலகமானது இனம்புரியாத ஒருசில சக்திகளால் அலைக்களிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. மக்களின் வாழ்க்கையானது திசைமாறிய பாய்மரக் கப்பலாகிக் கொண்டிருக்கிறது. வாய்மையினைப் புதைத்தழித்துவிட்டுத் தன்னுடைய வெற்றிக் கொடியை நாட்ட வேண்டும் என்ற முனைப்போடு தீமையானது இவ்வுலகை வலம் வருகிறது. உலகின் இத்தகைய ஒழுங்கற்ற நிலைக்கு வழிகாட்டுதலின்மையும் நல்லாலோசனையின்மையுமே மிக முக்கிய காரணங்களைச் சுட்டிக் காட்டப்படுகின்றன. அரசியல் ஆலோசகர்கள் அரசியல் கட்சிகளைக் கட்டிக் காப்பதற்கும் அதிகாரத்தைத் தூக்கிப் பிடிப்பதற்கும் தங்கள் பங்களிப்புகளைச் செலுத்தும் வேளையில் மக்களின் ஆன்ம வாழ்வினைக் கட்டிக் காத்திட அவர்களது தவறுகளைச் சுட்டிக் காட்டி, சரியான வாழ்விற்கான வழிமுறையை எடுத்துக் கூறிட விண்ணில் வீற்றிருப்பவரே நல்ல ஆலோசனை அன்னை மரியா. மரியா வாழ்வுதரும் வளர்பிறை. அவர் விண்ணுலகின் விடிவெள்ளி பூவுலகின் புதிய பாதை அவர் வானுக்கே எட்டா தூர வசந்தத்திற்கு அப்பாற்பட்ட சுகந்தம் துன்ப வேளையில் துவண்டு விழாமல் துணிந்து வாழ ஆலோசனை கூறுபவர் மரியா. தோல்விகள் நம்மைச் சூழ்ந்து விடாமல் நம்மைத் தூக்கிப் பிடிக்கும் ஏணிப்படியாய் எழுந்து நிற்பவர் மரியா. இவ்வாறு தமது நல்லாலோசனை மூலம் அன்னை மரியா பலரது ஆன்ம ஈடேற்றதுக்கான இறை ஆலோசனையாகிறார்.

**நல்லாலோசனை மாதாவே - ஓர் வரலாற்றுப் பார்வை**

நல்லாலோசனை மாதாவின் உருவமும் வழிபாடும் கோத்ரமாதா என்றழைக்கப்படும் அல்பேனியாவின் இடைக்கால உருவ அமைப்பைச் சார்ந்தது. பாரம்பரிய கூற்றுப்படி ஒட்டமான் துருக்கியர்களால் அல்பேனியா சூறையாடப்பட்டதால் அன்னையின் உருவப்படமானது இத்தாலியின் ஜென்சானோ திருத்தலத்தில் வைக்கப்பட்டது. அல்பேனியாவின் பாதுகாவலியான நல்லாலோசனை மாதா பலவித புதுமைகளையும் புண்ணியங்களையும் பொழிந்தாள்.



# முத்திபேறு சியன்னா நகரத்து பிரான்சிஸ் OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

நமது முத்திப்பேறு பெற்ற பிரான்சிஸ் சியன்னா நகரத்தில் 1266 ஆம் ஆண்டு பிறந்தார். இதே நகரத்தை சேர்ந்த முத்திப்பேறு பெற்ற அம்ரோஸ் அவர்களின் மறையுரை கேட்டு, இளம் வயதிலேயே துறவற வாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள முடிவு செய்தார். ஆனால், அவருடைய அம்மா மிகவும் நோயிற்றிந்தாதால், அம்மாவின் இறப்பு வரை அவரோடு இருந்து பணிவிடை செய்து வந்தார். பின்பு, யாரும் பார்க்காத இடமாக சென்று செபம் மற்றும் தவ வாழ்வில் வாழ முடிவு செய்தார். ஆனால், இறைவன் அவருக்கு மற்றொரு திட்டம் வைத்திருந்தார். அதன்படி, சியன்னா நகரத்தில் இருந்த மரியின் ஊழியர் குடும்பத்தில் சேர்ந்தார். இந்த காலகட்டத்தில் நமது மாரியின் ஊழியர் குடும்பம் பல சவால்களை சந்தித்தது வந்தது. அதிலும் குறிப்பாக, 1274 ல் நடந்த திரு அவை சங்கத்திற்கு பிறகு நம்முடைய சபை இருக்க வேண்டுமா இல்லையா என்று வத்திக்கான் முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலையை சந்தித்து வந்தது. புனித பிலிப் பெனிசியார் அவர்களின் முயற்சியால் ஒரு சில குழுமங்கள் மட்டும் புதிய நபர்களை சபைக்கு வரவேற்கலாம் என்று வத்திக்கான் அனுமதி கொடுத்தது. அதில் முக்கியமாக சியன்னா நகரத்தில் புதிய மரியின் ஊழியர்களின் வருகை அனுமதிக்கப்பட்டது. முத்திப்பேறு பிரான்சிஸ் தன்னுடைய சொந்த நகரிலேயே அணைத்து பயிற்சிகளையும் செய்வதற்கு இது உதவியாக இருந்தது. மேலும், இந்த கால கட்டத்தில், புனித பெரிகிரின், புனித பிலிப் பெனிசி போன்ற புனிதர்கள் மூலம் சபையின் ஆன்மிகத்தை பிரான்சிஸ் நன்றாக கற்று கொண்டு, குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். குருவாக தன்னுடைய பணியை சிறப்பாக செய்து வந்தார். அதிலும் குறிப்பாக, ஒப்புரவு அருட் சாதனம் கேட்பதிலும், மறையுரை போதிப்பதிலும், அவரை மிஞ்சிவர் யாரும் அந்த நகரத்தில் இல்லை என்கிற அளவிற்கு சிறந்து விளங்கினார். இது மட்டும் அல்லாமல், ஏழை மக்களுக்காக வீடு வீடாக சென்று பிச்சை கேட்டு, உதவி செய்தார். இவரின் சிறப்பை அறிந்து, ஒரு சிலர் தங்களுடைய இறக்கும் தருவாயில், தங்களுடைய சொத்துக்களை இவரிடம் ஒப்படைக்கும்படி எழுதி வைத்து சென்றனர். அந்த அளவுக்கு ஆன்மாக்களை ஊடுருவி மன மாற்றும் சிறப்பு கொடையை பெற்றவர் நம் பிரான்சிஸ். இவ்வாறு நல்ல இறைபணி செய்து, 1328 ஆம் ஆமடு மே 26 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவருடைய உடலை சியன்னா நகரத்தில் உள்ள நமது ஆலயத்தில் அடக்கம் செய்தார்கள். திருத்தந்தை 14 ஆம் ஆசீர்வாதப்பர் 1743 ஆம் ஆண்டு இவருக்கு முத்திப்பேறு பட்டம் அளித்தார்.





8 -ம் பக்க தொடர்ச்சி

நிறைந்திருக்கும். நமது உள்ளத்திலிருந்து உண்மையான சொற்கள் புறப்படும். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்று இயேசு கூறுகிறார். எனவே சட்ட திட்டங்களை நம்மை அடிமைப்படுத்தும் சங்கிலிகளாகப் பார்க்காமல் புனித பெர்க்மான்ஸ் அருளப்பர் கூறுவது போல 'ஒழுங்கைக் கடைப்பிடித்தால் அது நம்மைக் கடைப்பிடிக்கும்" என்பதை மனதில் இருத்துவோம் அனைத்துச் சட்டங்களுக்கும் மேலான அன்புக் கட்டளையை அர்ப்பணிக்கப்பட்டோர் நிறைவேற்றுவோம். அன்புக் கலாச்சாரத்தினால் மாற்று உலகை உருவாக்குவோம். இதுவே நமக்கு நிறைவான மகிழ்ச்சியைத் தரும்.

மூன்றாவதாக மரியாவைக் கோவிலில் அர்ப்பணித்த விழா அவரது எதிர்காலத் தியாகம் நிறைவாழ்வுக்கு ஒரு முன்னோட்டமாக அமைந்திருந்தது. இந்தச் சிறுவயதில் பெற்றோரை மறந்து தியாக மனப்பான்மையுடன் செபத்திலும் தவத்திலும் ஈடுபட்டு 9 ஆண்டுகள் திருக்கோவிலின் பணிகளுக்குத் தன்னை உட்படுத்தினார். இறைவாக்கினர் அன்னா அங்கிருந்த பெண்களிடம் சென்று புதிய உடன்படிக்கையின் பேழையும், வாக்குறுதியின் பாத்திரமும் திருக்கோவிலில் நுழைந்துள்ளது என்று மகிழ்ச்சியுடன் உரைத்தார் என்று புனிதை எமரிக் கூறுகின்றார். இக்கூற்று இயேசுவின் மீட்பப் பணியில் அன்னையின் தியாகமிக்க ஈடுபாட்டு வாழ்வு மிகத் தெளிவாகிறது.

அன்னையின் வாழ்வு புனித பவுலடியாரின் கூற்றை நினைவூட்டுகிறது. 'நீங்கள் பெற்றுக் கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள். முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள் (எபே. 4:1-3). இத்தகைய வாழ்வு வாழ நமக்குத் தேவை தியாகம், விட்டுக் கொடுத்தல், பரந்துபட்ட சமுதாயம், வாழ்வு பெற வேண்டும் என்ற உயர்வான நோக்கம்.


**நிறைவுரை**

அர்ப்பண வாழ்வைப் பற்றி திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் மிக அழகாகக் கூறுகிறார். இயேசுவைப் போன்று சிலுவையில் மரிக்கும் வரை அவரிடமிருந்த கீழ்ப்படிதல் நமக்குத் தேவை. இரண்டாவதாக, துன்புறும் ஊழியனாக வாழ்ந்த இயேசுவின் தாழ்ச்சி, அழைக்கப்பட்டோரிடம் அதிகம் காணப்பட வேண்டும். மூன்றாவதாக, சிலுவையில் பலியாக தன்னைக் கையளித்த செம்மறியாம் இயேசுவைப் போன்று தியாகமிக்க வாழ்வு நாம் வாழ வேண்டுமென்று கூறுகிறார். இவ்வாறு முழுமையான அர்ப்பண வாழ்வுக்கு இயேசுவும் மரியாவும் நம்மை அழைக்கின்றனர். அழைப்பு, அர்ப்பணிப்பு, அர்ச்சிப்பு ஆகிய மூன்றும் இதமாக நம்மில் இணையும் போது தான் இறையாட்சி நம்மிலும் பிறரிலும் மலரட்டும்.

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## II அரசர்கள்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21




**வலமிருந்து இடம்**

1) எனவே எலியா வாயிலாக அறிவிக்கப்பட்ட ஆண்டவரது வாக்கிற்கேற்ப, அகசியா …………, அவனுக்குப் புதல்வர் இல்லாமையால், அவனுக்குப் பின் யோராம் அரசன் ஆனான்

4) எலியா அவரை நோக்கி. நீ கேட்பது கடினமான காரியம். உன்னிடமிருந்து நான் எடுத்துக் கொள்ளப்படும்போது, நீ என்னைக் காண்பாயாகில் அது உனக்குக் கிடைக்கும்: ……… கிடைக்காது என்றார்.

5) சிரியாவின் மன்னன் இஸ்ரயேல் நாட்டின் மீது போர் தொடுத்தான். அப்பொழுது அவன் தன் அலுவலரோடு கலந்து பேசி, இந்த ………… பாளையம் இறங்குவோம் என்றான

8) யூதாவின்………….. இஸ்ரயேலரிடம் தோல்வியுற்று, தம் வீடுகளுக்கு ஓட்டம் பிடித்தனர்.

9) எனவே ஆண்டவர் அரசனைத் தண்டித்து அவன் இறக்குமட்டும் அவனைத் தொழுநோயாளன் …………..

11) அவா தொழுகை மேடுகளை அழித்து, நடுகற்களைத் ………….. அசேராக் கம்பத்தையும் வெட்டி வீழ்த்தினர். மோசேயால் செய்து வைக்கப்பட்ட வெண்கலப் பாம்பச் சிலையையும்

13) யோசியா திரும்பிப்பார்த்தபோது, அங்கு மலையின்மேல் கல்லறைகள் இருக்கக் கண்டார்……………ஆளனுப்பி அக்கல்லறைகளிலுள்ள எலும்புகளை எடுத்துவந்து, கடவுளின் அடியவர் உரைத்த ஆண்டவரின் வாக்கிற்கிணங்க, அவற்றைப் பலிபீடத்தின் மேல் சுட்டெரித்து மாசுபடுத்தினார்.

**இடமிருந்து வலம்**

2) யூதாவின் அரசன் யோசபாத்தினுடைய ஆட்சியின் பதினெட்டாம் ஆண்டில், ஆகாபின் மகன் யோராம் ………….. அரசன் ஆனான்

3) அப்பொழுது எலிசா, ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள். ஆண்டவர் கூறுவது இதுவே: நாளை இந்நேரம் சமாரிய நகர வாயிலில் ஒரு …………





நேர்மையையும் நிலைநாட்டுவார் என்று ஏங்கினர். தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் மெசியாவின் இரண்டாம் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கினர். இஸ்ரயேல் மக்களைப் போல, தொடக்ககாலக் கிறிஸ்தவர்களைப் போல நாமும் கிறிஸ்துவின் வருகையை மகிழ்ச்சியுடன் எதிர்பார்ப்போம். அவரது இறுதி வருகையின் போது நமக்கு நிறைவான மீட்பையும், அமைதியையும் தருவார். ஆனால் நிகழ்காலத்தில் அருள்வாக்கு, அருள் அடையாளங்கள், அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் ஆகியவற்றின் வாயிலாக அவர் வந்துகொண்டிருக்கின்றார். அவரை இனம் கண்டுகொண்டு அவரது அன்பில் நிலைத்து வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் வரவிருக்கும் மீட்பரைப் பற்றியும், அவர் வரும்போது ஏற்படவிருக்கும் நன்மைகளைப் பற்றியும் கூறுகின்றது. அரச குலத்தில் தோன்றும் அவர் அரசருக்கே உரிய முறையில் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவார். இத்தகைய நீதியின் அரசராகிய இயேசுவின் பிறப்புக்குத் தயார் செய்யும் நாம், நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டவர்களாக இருக்க வேண்டாமா? நம்முடைய வாழ்விலே, நம்மைச் சூழ்ந்தோர் வாழ்க்கையிலே நீதி நேர்மை தளிர்விடவும், அநீதி அழிந்தொழியவும் வேண்டி இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

தெசலோனிக்க நகர் கிறிஸ்தவர்களுக்காக நன்றி செலுத்தும் புனித பவுல் அடியார், அவர்கள் அனைவரும் இறைவனுக்கு உகந்த புனித வாழ்விலே வளர வேண்டும் என்று விரும்புகிறார். திருவருகைக் காலத்திலே நாம் அனைவரும் செபம் செய்தல், அன்பு செய்தல், நல்லவற்றை செய்தல் என்ற அனுதின செயல்களை கவனமாகச் செய்வதன் வழியாக இயேசுவின் வருகைக்காக விழிப்புடன் செயல்பட முடியும் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய நாங்கள் அனைவரும் செபம், தபம், அறச்செயல்கள் வழியாக மெசியாவின் இரண்டாம் வருகைக்காக விழிப்புடன் செயல்பட்டு அதன் வழியாக உமது மீட்பையும் அருளையும் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா! நீதியின் அரசராகிய உம் மகனின் பிறப்புக்குத் தயார் செய்யும் நாங்கள் எங்கள் வாழ்வில் அநியாயங்களை விடுத்து நீதியோடும் நேர்மையோடும் வாழ்ந்து அதன் வழியாக நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோராக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா! எங்களது அனுதின வாழ்வில் நீர் அருள்வாக்கு, அருள்அடையாளங்கள் மற்றும் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளின் வாயிலாக எங்களை சந்திக்கின்றீர் என்ற உண்மையை உணர்ந்து உம்மை எங்கள் வாழ்வில் இனம் கண்டுகொண்டு தூய வாழ்வு வாழத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! மெசியாவின் வருகை எல்லோருக்கும் குறிப்பாக தனிமையில் வாழ்வோர், கைவிடப்பட்டோர், கைம்பெண்கள், அநாதைகள், உடல் நலம் குன்றியோர் போன்ற அனைவருக்கும் மீட்பும், வாழ்வும், நம்பிக்கையும் தருகின்ற நிகழ்வாக இருக்கவும், இவ்வுலக நாடுகள் அனைத்துக்கும் நீதியும் அமைதியும் கிடைத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அரசராக, ஏழை எளியவர்களின் அரசராக இருக்கின்றார். அவருடைய அரசாட்சியின் மக்களாக வாழுகின்ற நாமும் அன்பு நிறைந்தவர்களாக, மன்னிப்பவர்களாக, ஏழை எளியவர்களுக்கு உதவி செய்பவர்களாக, தனிமையில் இருப்பவர்களை தேடிச் சென்று ஆறுதலளிப்பவர்களாக வாழ வேண்டும். நம் அரசரைப் பின்பற்றி இறையாட்சியின் மக்களாக வாழ முயற்சி செய்வோம். அதற்கான வரம் வேண்டி இன்றைய திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

கிறிஸ்துவின் அரசாட்சி என்றும் நிலையான அரசாட்சி. அவருடைய ஆட்சிக்கு ஒருபோதும் முடிவும் கிடையாது, அழிவும் கிடையாது. ஆட்சியுரிமையும், மாட்சியும் இயேசுவுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லா இனத்தாரும், நாட்டினரும், மொழியினரும் அவரைத்தான் வழிபட வேண்டும் என்று வலியுறுத்தும் இம்முதல் வாசகத்திற்கு நம் செவிகளைத் திறப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இறந்தவர்களுள் முதன்முதலாக உயிர்த்த கிறிஸ்து மாட்சிக்குரிய அரசராக உயர்த்தப்பட்டுள்ளார். மண்ணுலக அரசர்களுக்கெல்லாம் தலைவராக இருக்கின்ற அவர் நம்மையும் தம்முடைய மாட்சியில் பங்குபெற அழைத்திருக்கின்றார். நாம் அவருடைய இறையரசின் மக்கள் என்ற மனநிலையோடு இவ்வாசகத்திற்குச் செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. விண்ணக மண்ணக அரசராகிய இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் நல்ல ஆன்மீகத் தலைவர்களாக பொதுநல நோக்கத்தோடு திருஅவையின் வளர்ச்சிக்காக உழைக்கத் தேவையான வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. நல்ல ஆயனே எம் இறைவா, எம் நாட்டுத் தலைவர்களுக்காக மன்றாடுகின்றோம். அவர்கள் அனைவரும் தன்னலமின்றியும், ஆடம்பரமின்றியும் அரசாட்சி செய்து தியாகம் நிறைந்த தலைவர்களாக வாழ வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, எம் பங்கிலுள்ள இளைஞர், இளம் பெண்களுக்காக மன்றாடுகின்றோம். அவர்கள் தூய ஆவியின் துணையோடு நேர்வழியில் நடந்து எதிர்காலத் தலைவர்களாக உருவாக வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. இரக்கத்தின் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் எங்கள் அரசராகிய கிறிஸ்துவைப் பின்பற்றி நீதியோடும், நேர்மையோடும் எங்கள் கடமைகளை நிறைவேற்றி இறையாட்சியின் மக்களாக வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**திருவருகைக்காலம் முதல் ஞாயிறு (01.12.2024)**
**எரே 33:14-16 தெச 3:12-4:2 லூக் 21:25-38**
**திருப்பலி முன்னுரை**

இன்று திருஅவையானது மகிழ்வோடும், நம்பிக்கையோடும் திருவருகைக் காலத்தைத் தொடங்குகிறது. திருவருகைக் காலம் எதிர்பார்ப்பின் காலம், நம்பிக்கையின் காலம், மற்றும் திருவழிபாட்டு ஆண்டின் தொடக்க காலம். கிறிஸ்துவின் பிறப்புப் பெருவிழாவிற்காக நம்மை தயாரிக்கும் காலம். அன்று இஸ்ரயேல் மக்கள் மெசியாவின் முதல் வருகைக்காக நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருந்தனர். மெசியா நீதியையும்





கோதுமை மாவு ஒரு வெள்ளிக் காசுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு வெள்ளிக் காசுக்கும் விற்கப்படும் என்றார்.
6) அக்காலத்தில், ஆண்டவர் இஸ்ரயேல் நாட்டின் அளவைக் குறைக்கத் தொடங்கினர்.......... அதன் எல்லைப் பகுதிகள் அனைத்தையும் கைப்பற்றலானான்.
7) யோவாசுக்கு அவன்............ ஐம்பது குதிரை வீரரும் பத்துப் தேர்களும் பதினாயிரம் காலாள் படையினரமே எஞ்சியிருந்தனர். ஏனெனில் சிரியா மன்னன் அவர்களை அழித்துப் போரடிக்கும் களத்துத் தூசிபோல் ஆக்கியிருந்தான்.
12) இதோ! நாள்கள் வரும்! அப்போது உன் அரண்மனைப் பொருள்கள் அனைத்தும், உன் மூதாதையர் இன்றுவரை சேகரித்து வைத்தள்ள யாவும், ஒன்று............ பாபிலோன் நகருக்குக் கொண்டு போகப்படும்.

**மேலிருந்து கீழ்**

3) அப்பொழுது சிரியா ............ சென்று வாரும், நான் இஸ்ரயேல் அரசனுக்கு மடல் தருகிறேன் என்றார். எனவே நாமான் ஏறத்தாழ நானூறு கிலோ வெள்ளியையும், ஆறாயிரம் பொற்காசுகளையும், பத்துப் பட்டாடைகளையும் எடுத்துக்கொண்டு பயணமானார்.
4) அப்பொழுது, எலியா தம் போர்வையை எடுத்துச் சுருட்டி அதைக் கொண்டு நீரை அடித்தார். தண்ணீர் ........... பிரிந்து கொள்ள, இருவரும் உலர்ந்த தரைமீது நடந்து நதியைக் கடந்தனர்.
7) ஒவ்வொரு ............ பணத்தைத் தனக்கு அறிமுகமானவர்களிடமிருந்து பெற்று கோவிலில் சிதைந்த பகுதிகளைப் பழுதுபார்க்க வேண்டும் என்றான்.
11) வாழும் கடவுளைப் பழித்து இகழும்படி அசீரிய மன்னனாகிய தன் ............ அனுப்பப்பட்ட இரப்சாக்கே சொன்னவற்றையெல்லாம் உம் கடவுளாகிய ஆண்டவர் கேட்டிருப்பார்!

**கீழிருந்து மேல்**

1) அப்பொழுது, எலியா தம் போர்வையை எடுத்துச் சுருட்டி அதைக் கொண்டு நீரை அடித்தார். தண்ணீர் இருபுறமும் பிரிந்து கொள்ள, ........... உலர்ந்த தரைமீது நடந்து நதியைக் கடந்தனர்.
2) எலிசா கில்காலுக்குத் திரும்பினார். அப்பொழுது நாட்டில் பஞ்சம் நிலவியது. ........... குழுவினர் அவர் முன் அமர்ந்திருக்கையில், எலிசா தம் பணியாளன் ஒருவனை நோக்கி, நீ ஒரு பெரிய பானையை எடுத்து அதில் இறைவாக்கினர் குழுவினர்க்குக் கூழ் காய்ச்சு என்றார்.
5) பிறகு அவன் தேரின்மீது ஏறி இஸ்ரியேலுக்குச் சென்றான். ஏனெனில் அங்கே யோராம் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தான்.......யூதாவின் அரசன் அகசியாவும் யோராமைப் பார்க்க வந்திருந்தான்.
6) அரசன் யோராமின் மகளும், அகசியாவனி சகோதரியுமான யோசேபா அகசியாவின் மகன் யோவாசைத் தூக்கிக்கொண்டு போய் ஒளித்து வைத்தாள். அவன் பொல்லப்படவிருந்த ................புதல்வர்களில் ஒருவன்
9) ஆகாசு அரசனானபோத அவனுக்கு வயது இருபது. ஆவன் எருசலேமில் பதினாறு ......... ஆட்சி செய்தான்.
10) இக்காரியத்தை நீங்கள்............ என ஆண்டவர் அவர்களுக்கு உரைத்திருந்தாலும், அவர்கள் சிலைகளை வழிபட்டு வந்தனர்.
12) அப்பொழுது, இறைவாக்கினர் குழவினரைச் சார்ந்த ஒருவரின் மனைவி எலிசாவிடம் வந்து கதறி அழுது, உம் அடியவனாகிய என் கணவர் இறந்து .......... அவர் ஆண்டவருக்கு அஞ்சி நடந்தவர் என்பது உமக்குத் தெரியும். அவருடைய கடன்காரன் என் இரு பிள்ளைகளையும் தனக்கு அடிமைகளாக எடுத்துக் கொள்ள வந்திருக்கிறான் என்றார்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-11-2024

# அன்பரிடம் நமை சேர்ப்பார்

18



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

கானாவூர் திரு மணத்தில்
கனிரசமே மாற்றச் செய்த
அன்னை மரி இருக்கையிலே
என்ன குறை நமக்குண்டு?
கால்கடுக்க நடந்து சென்று
பாலகனை காத்த தெய்வம்
கன்னி மரி இருக்கையிலே
கண்ணீரும் நமக் கெதற்கு?
கல்வாரி மலை தனிலே
கொடுந்துமரம் கண்ட தாயும்
தான் பட்ட வேதனையை
நாம் படவே விடுவாரோ?
பிறக்கும் நல் வேளையிலும்
இருக்கும் எல்லா வேளையிலும்
மரிக்கும் தரு வாயினிலும்
மன்றாடும் நல் தாயல்லவோ?
பாவிகளாய் நாம் இருந்தாலும்
பாதகங்கள் நாம் புரிந்தாலும்
தாயவரின் சேய்கள் அன்றோ!
பாதாளமும் அவர் விடுவதுண்டோ
துன்பப் படும் வேளையிலே
துயர் துடைக்க வந்திடுவார்
அன்பு மகன் இயேசுவிடம்
அர வணைக்க சொல்லிடுவார்
அலகை யவன் வாதைகளை
அரண் போட செய்திடுவார்
உலக இன்ப போதைகளை
மிரண் டோட செய்திடுவார்
விதி வினைகளை நம்பாதே
பழி பாவங்கள் செய்யாதே
அன்னை மரி துணையிருப்பார்
அன்பரிடம் நமை சேர்ப்பார்





பாவமன்னிப்பிற்காக செலுத்தப்படும் பழைய ஏற்பாட்டு பழிகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளியாக அமைந்தது ஆண்டவர் இயேசுவின் ஒப்பற்ற பலி. எல்லா பலிகளுக்கும் மேலாக தன்னையே பலியாக்கி கிறிஸ்து நம் அனைவருக்கும் பாவமன்னிப்பையும், மீட்பையும் கொடுத்திருக்கின்றார். அவரால் மீட்கப்பட்ட நாம் புனித வாழ்க்கை வாழ அழைப்புக் கொடுக்கும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. எல்லாம் வல்ல இறைவா, உம் புனித திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரையும் நிறைவாக ஆசிர்வதியும். அவர்கள் தங்கள் கடமையை சரிவரச் செய்து உம்முடைய இரண்டாம் வருகைக்காகத் தங்களையே தயாரித்து ஆயத்தமாயிருக்க அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் நற்செயல்கள் செய்வதன் வழியாக, மற்றவரை மன்னித்து அன்பு செய்வதன் வழியா, இறைவார்த்தையின்படி வாழ்வதன் வழியாக, ஏழைகளுக்கு உதவி செய்வதன் வழியாக எங்களையே தயாரித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தமாய் இருக்க வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
3. கனிவின் இறைவா, எம் பங்கில் வாழும் அனைத்து நோயாளிகளுக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம். பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள அவர்களைத் தொட்டு குணப்படுத்தி உடல், உள்ள சுகத்தைத் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, படிக்கும் அனைத்து மாணவ மாணவியருக்காக உம்மை மன்றாடுகின்றோம். தூய ஆவியின் வல்லமையினால் அவர்களை நிரப்பி அவர்கள் நல்லமுறையில் படித்து அறிவிலும், ஒழுக்கத்திலும், இறைநம்பிக்கையிலும் வளரத் தேவையான அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

## கிறிஸ்து அரசர் பெருவிழா (24.11.2024)

**தானி 7:13-14 திவெ 1:5-8 யோவான் 18:33-37**

**திருப்பலி முன்னுரை**

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இன்று நம் திருஅவை ஆண்டவர் இயேசு அகில உலக அரசர் என்னும் பெருவிழாவைக் கொண்டாடுகின்றது. விவிலியத்தில் ஆண்டவர் இயேசு ஒருமுறை கூட தன்னை ஒரு அரசர் என்று காட்டிக்கொள்ளவில்லை. தான் ஒரு அரசர் என்று கூறவும் இல்லை. ஆனால் விவிலியத்தில் பல இடங்களில் ஆண்டவர் இயேசு யூத குலத்தின் அரசர், யாக்கோபு குடும்பத்தின் மீது ஆட்சி செலுத்துவார், தாவீதின் வழிமரபில் வருகின்ற பெரிய அரசர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்றைய நற்செய்தியில் இயேசு ‘என்னுடைய அரசாட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல’ என்று கூறுகின்றார். ஆம், இயேசுவின் அரசாட்சி இம்மண்ணுலக ஆட்சியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இவ்வுலக ஆட்சி ஆடம்பரமிக்க ஆட்சி, பகைமை நிறைந்த ஆட்சி, சுயநலத்தின் ஆட்சி. ஆனால், ஆண்டவர் இயேசுவின் அரசாட்சி எளிமையின் அரசாட்சி, அன்பின் அரசாட்சி, அமைதியின் அரசாட்சி, தியாகத்தின் அரசாட்சி. இத்தகைய அரசாட்சியின் மக்களாக வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்று சொல்லுவார்கள். நம்முடைய அரசர் நீதியின் அரசராக, அன்பின் அரசராக, மன்னிப்பின் அரசராக, சமாதானத்தின் அரசராக, பரிவின் அரசராக, பகிர்வின்

அன்போடும், பண்போடும் வாழ்ந்து கிறிஸ்துவை மாட்சிப்படுத்துகின்ற மக்களாகவும், இவ்வுலகில் நல் மனிதர்களாகவும் வாழ வரம்தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகினறோம்.

3 பகிர்தலின் இறைவா, நாங்கள் எங்களிடம் இருக்கும் செல்வத்தை ஏழை எளியவர்களோடு பகிர்ந்து வாழ்ந்து அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக உழைக்கின்ற நல்ல உள்ளத்தை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4 கனிவின் இறைவா, இவ்வுலக மக்கள் அனைவரையும் இயற்கையின் சீற்றங்களிலிருந்தும், கொடிய நோய்களிலிருந்தும் பாதுகாத்து உம்முடைய பராமரிப்பில் என்றும் மகிழ்ச்சியோடும், மனநிம்மதியோடும் வாழச் செய்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 33 ஆம் ஞாயிறு (17.11.2024)

**தானி 12:1-3 எபி 10:11-14,18 மாற்கு 13:24-32**

**திருப்பலி முன்னுரை**

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! ஆண்டின் பொதுக்காலம் 33 ஆம் ஞாயிறு நாம் வாசிக்கும் இறைவார்த்தை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்ற எடுத்துச்சொல்லி நாம் அந்த வருகைக்காக ஆயத்தமாயிருக்க அழைப்பு விடுக்கின்றது. ஆண்டவர் இயேசு இரண்டாம் முறையாக வருவர் என்பது நம் கிறிஸ்தவ நம்பிக்கையாக இருக்கின்றது. ஒவ்வொரு திருப்பலியிலும், கிறிஸ்து மரித்தார், உயிர்த்தார், மீண்டும் வருவார் என்று நாம் அறிக்கையிடுகின்றோம். இயேசு மீண்டும் வருவார் என்பது உறுதி. ஆனால் எப்பொழுது வருவார் என்று யாரும் உறுதிபடக் கூற முடியாது. இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் இரண்டாம் வருகையின் அடையாளமாக இருக்கலாம். ஆனால் எப்பொழுது, எங்கு என்று யாரும் ஆணித்தரமாக கூற முடியாது. கிறிஸ்து எப்பொழுது வந்தாலும் நாம் அவருடைய வருகைக்காக தயார் நிலையில் இருக்க வேண்டும். கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின்போது மீண்டும் நமக்காக பாடுகள் படமாட்டார், இறக்க மாட்டார். மாறாக, நமக்குத் தீர்ப்பு வழங்குவார். நல்லவர்களுக்கு நிலைவாழ்வின் தீர்ப்பும், தீயவர்களுக்கு நிலையான தண்டனைத் தீர்ப்பும் வழங்குவார். நியாயத் தீர்ப்பு வழங்கும் கிறிஸ்துவிடமிருந்து நாம் நிலைவாழ்வின் பரிசைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் கிறிஸ்துவின் வருகையை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும். நல்ல செயல்கள் செய்வதன் வழியாக, மற்றவரை மன்னித்து அன்பு செய்வதன் வழியாக, இறைவார்த்தையின்படி வாழ்வதன் வழியாக, ஏழைகளுக்கு உதவி செய்வதன் வழியாக நம்மையே தயாரித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக நாம் ஆயத்தமாய் இருப்போம். அதற்கான வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இறுதித் தீர்ப்புக் காலத்தில் இறந்து மண்ணில் புதைக்கப்பட்டுள்ள நீதிமான்கள், நேர்மையாளர்கள் அனைவரும் உயிர்த்தெழுவர். அவர்கள் அனைவரும் மீட்புப் பெற்று ஒளி வீசுவர். தீயவர்கள் அனைவரும் இழிவுக்கும், வெட்கத்திற்கும் உள்ளாவர் எனக்கூறி நம் ஒவ்வொருவரையும் நீதியின் மக்களாக வாழ அழைப்புக் கொடுக்கும் இம்முதல் வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



## பொதுக்காலம் முப்பத்தொன்றாம் ஞாயிறு (03.11.2024)

**இச 6:2-6 எபி 7:23-28 மாற் 12:38-44**

**திருப்பலி முன்னுரை**

இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்தின்போது கடவுள் மோசே வழியாக பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். அந்த பத்துக் கட்டளைகளில் முதல் மூன்று கட்டளைகள் கடவுளை மையமாகக் கொண்டது. கடவுளை நாம் எப்படி அன்பு செய்ய வேண்டும், எந்தவகையில் கடவுளுக்கு பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. அடுத்த ஏழு கட்டளைகள் பிறரன்பை மையமாகக் கொண்டவை. நாம் நம்முடைய பெற்றோரை, சகோதர, சகோதரிகளை, நம் அயலாரை எப்படி அன்பு செய்ய வேண்டும், எத்தகைய மரியாதையை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த பத்துக் கட்டளைகளை ஆண்டவர் இயேசு சுருக்கி இறையன்பு, பிறரன்புக் கட்டளை என பொன் விதியை நமக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் நம்மைப் படைத்து, பராமரித்து, மீட்டு, காத்து வருகின்ற கடவுளை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்ய வேண்டும். நம்முடைய முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும், முழு ஆன்மாவோடும் அன்பு செய்ய வேண்டும். அதாவது, இந்த உலக செல்வங்கள், இவ்வுலக உறவுகள் இவை அனைத்தையும் விட கடவுளை அன்பு செய்ய வேண்டும். இந்த இறை அன்பானது நம்மை பிறரன்புக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஏழை, பணக்காரன், படித்தவன், பாமரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி அனைவரையும் அன்பு செய்து அனைவருக்கும் உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். அதுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை. எனவே, இறைவனையும், நம் சக மனிதர்களையும் அன்பு செய்து நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வரம் வேண்டியவர்களாக இத்திருப்பலியில் பங்கொடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே உண்மையான கடவுள். வேறு கடவுள் நமக்கு இல்லை. அவருக்கு அஞ்சி அவருடைய கட்டளைகளையும், நியமங்களையும் கடைபிடிப்பவர்கள் நீண்ட ஆயுளோடும், செழிப்போடும் வாழ்வார்கள என்பதை இன்றைய முதல் வாசகம் சுட்டிக் காட்டுகின்றது. அவ்வாசகத்திற்கு செவிகொடுத்து நம் கடவுளை முழுமையாக அன்பு செய்து அவருடைய கட்டளைகளைக் கடைபிடித்து வாழ முயற்சி செய்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவர் என்றும் குருவாக இருந்து அவரிடம் வருபவர்களுக்காக தந்தையாகிய இறைவனிடத்தில் பரிந்து பேசுகின்றார். அம்மக்களை மீட்கின்றார். இவர்

தம்மீது நம்பிக்கை கொண்டோருக்காக தன்னையே பலியாகக் கொடுத்தவர். தூயவராகவும், கபடற்றவராகவும், மாசற்றவராகவும் இருந்தபொழுதும் மக்களின் மீட்புக்காக பலியான செம்மறி அவரே. அவரிடம் நம்பிக்கை கொண்டு அவருடைய பரிந்துரையையும், மீட்பையும் பெற்றுக் கொள்ளும் ஆவலோடு இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. ஒற்றுமையின் இறைவா, நீர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்வாக்கி, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்கள் ஒற்றுமையோடும், கிறிஸ்துவின் போதனைக்கும் ஏற்றபடி வாழ அவர்களை நல்வழியில் நடத்திட தேவையான வரம்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அனைவரும் நீர் எங்களுக்குக் கொடுத்துள்ள அனைத்துக் கட்டளைகளையும், நியமங்களையும் முழுமனதோடு கடைபிடித்து அதன் வழியாக நீர் எங்களுக்கு வாக்களித்துள்ள நிலைவாழ்வு என்னும் பரிசைப் பெற்றுக்கொள்ள அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
3. கருணையின் இறைவா, நாங்கள் அனைவரும் எங்களுக்குள் எந்த ஏற்றத் தாழ்வுகளும், வேற்றுமைகளும் இல்லாமல் நாங்கள் அனைவருமே இறைவனுடைய மக்கள் என்ற முறையில் ஒற்றுமையோடு ஒரே உள்ளமும், எண்ணமும், சிந்தனையும், செயலும் கொண்டு வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஆற்றலின் இறைவா, கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அனைவரும் இறையன்பு, பிறரன்பு கட்டளைகளை முழுமனத்தோடு கடைபிடித்து, இவ்வுலக செல்வங்கள், உறவுகளுக்கு மேலாக உம்மை முழுமையாக அன்பு செய்து அதன் வழியாக எங்கள் அயலாரையும் அன்பு செய்து எங்கள் அன்றாட கிறிஸ்தவ வாழ்வை நாங்கள் நல்ல முறையில் வாழ ஆற்றல் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் முப்பத்திரெண்டாம் ஞாயிறு (10.11.2024)

**1அரச 17:10-16 எபி 9:24-28 மாற் 12:38-44**

**திருப்பலி முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, நாம் வாழும் சமுதாயத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள், தீயவர்களும் இருக்கிறார்கள்.நாம் யாரைப்போல் வாழவேண்டும், யாரைப்போல் வாழக்கூடாது என்பதை இன்றைய இறைவார்த்தை சுட்டிக்காட்டுகின்றது. இன்றைய நற்செய்தியில் மறைநூல் அறிஞர் பற்றியும், ஏழைக்கைம்பெண் பற்றியும் எடுத்துச் சொல்லி நாம் யாரைப் பின்பற்ற வேண்டும் என்பதை ஆண்டவர் சுட்டிக் காட்டுகின்றார். மறைநூல் அறிஞர்கள் என்பவர்கள் இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொள்ளாதவர்கள். பரிசேயர்களோடு சேர்ந்து இயேசுவை பழிவாங்கத் துடித்தவர்கள். பல நேரங்களில் இயேசுவோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரை எப்படியாவது பிரச்சினையில் சிக்கவைக்க வேண்டும் என்று அங்கலாய்த்தவர்கள். வெளிவேடக்காரர்களாக வாழ்ந்தவர்கள். வெளியிலே தங்களை நீதிமான்களாகக் காட்டிக் கொண்டு உள்ளுக்குள் பாவிகளாக வாழ்ந்தவர்கள். இவர்களைப் போல் நாம் வாழக்கூடாது என்பதை இயேசு எடுத்துச் சொல்லி நாம் அனைவருமே ஏழைக் கைம்பெண்ணைப் போல் வாழ அழைப்புக் கொடுக்கின்றார். ஏழைக் கைம்பெண் தம்மிடம் இருந்த அனைத்தையுமே கோயில் உண்டியலில் போட்டுவிட்டு இறைவனுடைய பராமரிப்பில் நம்பிக்கை கொண்டிருந்தார். தன்னுடைய அடுத்த வேளை உணவைப் பற்றியோ, தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியோ துளிகூட கவலைப்படவில்லை. மாறாக, தன்னைப் படைத்த கடவுள் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு அவர் என்னைப் பார்த்துக் கொள்வார், பராமரித்துக் கொள்வார் என்ற எண்ணத்தில் தன்னிடமிருந்த எல்லவற்றையும் கடவுளுக்கு காணிக்கையாக்கிவிட்டார். இந்த கைம்பெண்ணைப் போல் நாம் அனைவருமே எப்பொழுதும் கடவுளுடைய பராமரிப்பில் நம்பிக்கை வைத்து வாழவேண்டும் என்பதை ஆண்டவர் சுட்டிக்காட்டுகின்றார். எனவே, மறைநூல் அறிஞர், பரிசேயரைப்போல் வெளிவேடத்துடன் வாழாமல், ஏழைக் கைம்பெண்ணைப்போல் எளிமையோடும், இறை பராமரிப்பில் நம்பிக்கையோடும் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கொடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

“இறைக்கிற கிணருதான் ஊறும்” என்று சொல்வார்கள். ஒரு கிணற்றில் தொடர்ந்து நீர் இறைக்கின்ற போதுதான் அக்கிணற்றில் தொடர்ந்து தண்ணீர் ஊறிக்கொண்டே இருக்கும். இறைக்காத கிணறு வற்றிவிடும். அதேபோல் நம்மிடம் இருக்கின்ற செல்வத்தை நாம் மற்றவரோடு பகிர்ந்து கொள்கின்றபோத அச்செல்வமானது பெருகும்.சாரிபாத்து கைம்பெண் தன்னிடம் இருந்த சிறிய அளவு மாவில் இறைவாக்கினர் எலியாவுக்கு அப்பம் சுட்டுக் கொடுத்தார். அவருடைய பானையிலிருந்த மாவு பெருகிக்கொண்டே இருந்தது. கலையத்திலிருந்த எண்ணையும் குறையவில்லை. எனவே, நாமும் நம்மிடம் இருப்பதை பகிர்ந்து கொண்டு அவற்றை நிறைவாக பெருக்கிக் கொள்ள வரம் வேண்டியவர்களாக இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இவ்வுலகின் பாவங்களைப் போக்குவதற்காக இம்மண்ணில் உதித்த ஆண்டவர் இயேசு ஒருமுறை பாடுபட்டு தன்னை பலியாகக் கொடுத்து நம் பாவங்களைக் கழுவியிருக்கின்றார். இப்பொழுது அவர் விண்ணுலகில் நுழைந்து நம் சார்பாக கடவுளின் திருமுன்னிலையில் நின்று நமக்காக பரிந்து பேசுகின்றார். அவர் மீண்டும் தோன்றுவார். ஆனால் மறுபடியும் நமக்காக பாடுபட்டு மரிப்பதற்காக அல்ல. மாறாக, நமக்கு நியாயத் தீர்ப்பு வழங்குவதற்காக. எனவே, அவர் மறுபடியும் தோன்றும்போது அவரை எதிர்கொள்ள நாம் தகுதிபெறும் பொருட்டு தூய வாழ்வு வாழ வரம் வேண்டியவர்களாக இவ்வாசகத்திறகு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

**1** அன்பின் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்கள் சொல்லாலும், செயலாலும் இறை மக்களுக்கு முன்மாதிரியாக இருந்து அவர்கள் நீதியின் வழியில் வாழ உதவி செய்திடும் நல்தலைவர்களாக வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2 எல்லாம் வல்ல இறைவா, நாங்கள் எங்கள் சமுதாயத்தில் வாழும் நல்ல மனிதர்களைப் பின்பற்றி அவர்களைப் போல் நேர்மையோடும், நீதியோடும்,